**22.11.2022 அ.வ.எண்.25/2022 பி.வா.சா.1 பர்வீன், க/பெ.முபாரக்**

**குறுக்கு விசாரணை**

என் தந்தை பெயர் அல்லாபகஷ் என் தாயார் பெயர் அலிமாபீவீ அவர் 13ம் பிரதிவாதி என்பது சரிதான். சாராபீ என் தந்தை வழி பாட்டி. எனது சகோதரர் பெயர் ரசூல். அவரது மனைவிதான் 1ம் வாதி. 2,3 வாதிகள் 1ம் வாதியின் பிள்ளைகள். எனது தந்தை 05.06.2021ல் இறந்தார். என் தந்தை அரசு ஒப்பந்தகாராக இருந்தார். சாலை பணி ஒப்பந்தங்களுக்கு வைப்பீட்டு தொகை செலுத்தியிருந்தார். ரூ.1,62,11,325யை என் தந்தை வைப்பீடாக செலுத்தியிருந்தார் என்றால் வைப்பீட்டு தொகை மற்றும் என் தந்தைக்கு செலுத்தப்படவேண்டி இருந்த தொகை சேர்த்து மொத்தம் மேற்படி தொகை என் தந்தைக்கு கிடைக்கவேண்டி இருந்தது. அந்த தொகையை பெருவது சம்மந்தமாக என் தாயார் நீதிபேராணை மனு தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட உத்தரவு அடிப்படையில் மாவட்ட ஆட்சி தலைவர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பது சரிதான். அந்த உத்தரவு இந்த வழக்கிற்கு பின்னிட்டு பிறப்பிக்கப்பட்டது என்பது சரிதான். மாவட்ட ஆட்சி தலைவர் நடத்திய விசாரணையில் நானும் கலந்துக்கொண்டேன். மாவட்ட ஆட்சி தலைவர் தொகையை யார்யார் பெறவேண்டும் என வாரிசுசான்று அடிப்படையில் தொகை ஒதுக்கி உத்தரவு இட்டுள்ளார் என்றால் அவர் தொகை ஒதுக்கி உத்தரவிட்டது வாரிசுசான்று அடிப்படையில்தான் ஆனால் அதில் எனக்கு ஆட்சேபனை உள்ளது இருந்தாலும் என் அண்ணன் மகன்களுக்கு தானே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதால் மேற்கொண்டு நான் ஆட்சேபிக்கவில்லை. மாவட்ட ஆட்சி தலைவர் புதிய வாரிசுசான்று அடிப்படையில் தொகை ஒதுக்கியுள்ளார் அதில் 1ம் வாதியின் பெயர் இல்லை. 2/5பாகம் 2,3 வாதிகளுக்கு ஒதுக்கி மாவட்ட ஆட்சிதலைவர் உத்தரவிட்டுள்ளார். என் தந்தை பெயரில் ஒரு ஜே.சி.பி இயந்திரம் உள்ளது என்பது சரிதான். அந்த இயந்திரத்தின் மூலம் வரும் வருமாணத்தையும் அந்த இயந்திரத்தையும் நானும் என் தாயாரும் 2,3 வாதிகளும் அடைந்து கொள்வது என்றும் வருமாணத்தில் இருந்து இயந்திரத்தின் பராமரிப்பு செலவை 1ம் வாதி செய்வது என்றும் எங்களுக்கிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது என்பது சரிதான். தற்போது வழங்கப்பட்டுள்ள வாரிசுசான்றை வாதிகள் ஏற்றுகொண்டு நீதிமன்றத்தில் சமாதானத்தீர்ப்பணைக்கு விண்பிக்கும் பட்சத்தில் எனக்கு ஆட்சேபணை உண்டா எனக் கேட்டால் எனக்கு ஆட்சேபணை உள்ளது. இரண்டாவதாக கொடுக்கப்பட்டுள்ள வாரிசுசான்றும் இஸ்லாமிய சட்டப்படி வழங்கப்படவில்லை. அந்த சான்று இந்திய வாரிசுரிமை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது எனவே அதனை ஆட்சேபணையோடுதான் பெற்றுக்கொண்டுள்ளோம். அந்த வாரிசு சான்றை எதிர்காலத்தில் ஆட்சேபிப்பேனா எனக் கேட்டால் அதுப்பற்றி இப்போது கூற இயலாது. இரண்டாவதாக வழங்கப்பட்ட வாரிசுசான்றை வாதிகள் ஏற்றுக்கொள்கின்றனர் என்றால் அதைப்பற்றி எனக்கு பிரச்சணையில்லை.

**மறுவிசாரணை - இல்லை.**